







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 19 7.05.2025


दान पात्र



உள்ளே....

படிக்க வேண்டிய உபதேசங்கள்

# அறிவுள்ளவன் அறியவேண்டிய முப்பத்திரண்டு



# அறிவுள்ளவன் அறியவேண்டிய முப்பத்திரண்டு

### 44-வது பட்டம் ஸ்ரீமதழகிய சிங்கரின் அமுதமொழிகள் !



1. பிறவியுள் புகுந்திருக்கிற நம்மை, தாயும் தந்தையுமான ஸ்ரீமந்நாராயணன், காலத்தை எதிர்பார்த்து கரையேற்றி ரக்ஷிப்பான் என்ற நம்பிக்கை பூர்ணமாக இருக்க வேண்டும். பகவான் நம்மை ரக்ஷிப்பதற்கு நாம் ஆசார்யன் திருவடிகளை ஆஶ்ரயித்திருப்பது மிகவும் முக்கியம் என்று நினைத்து ஸதாசார்யனைத் தேடி அடையவேண்டும்.

2. நாம் அவசியம் அறியவேண்டிய எல்லா விஷயங்களையும் நன்றாக விளக்கும் திருவஷ்டாக்ஷரம், த்வயம், சரம ச்லோகம் என்ற மூன்று மந்த்ரங்களையும் ஆசார்யனிடம் உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. நாம் ராமாநுஜ ஸித்தாந்தப்படி ஸ்ரீமந்நாராயணனுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்தத்தை, அதாவது, “ஸ்ரீமந்நாராயணன் நமக்கெல்லாம் உயிர், நாம் எல்லோரும் அவனுக்கு உடல்” என்ற விஷயத்தை எந்தத்தசையிலும் மறவாமல் இருக்கவேண்டும்.

4. நாம் அடையப்போகும் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றியும், அவனை அடைகிற ஜீவாத்மாக்களைப் பற்றியும், மோக்ஷம் பெறுவதற்காகச் செய்ய வேண்டிய ஶரணாகதி முதலியவை பற்றியும், ஸ்ரீவைகுண்டம், அதாவது பலன் எப்படிப்பட்டது என்பதைப் பற்றியும், பலனைப்பெறுவதற்கான உரிமை இருந்தும், இது வரையில் மோக்ஷம் அடையாமல் நாம் ஏன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். அதாவது, அர்த்த பஞ்சகத்தை அறியவேண்டும்.

5. பரமாத்மா ஸர்வவித ஞானவான் என்றும், எங்கும் நிறைந்தவன் என்றும், ஜீவாத்மாக்கள் அறிவுடையவர்கள், அணுஸ்வரூபர்கள் என்றும், காலம், ப்ரக்ருதி, வைகுண்டலோகம் ஆகிய மூன்றும்

அசேதனங்கள், அறிவற்றவை என்றும் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கவேண்டும்.

6. தேவதைகள் என்று ப்ரஸித்தர்களான ப்ரம்ம, ருத்ராதிகளுக்கும், மேற்பட்ட உத்க்ருஷ்டமான தேவதை ஸ்ரீமந்நாராயணன் என்று கலங்காத நிச்சயமுடையவனாக இருக்கவேண்டும்.

7. இந்த உலகிலுள்ள விஷயாநுபவங்களினால் ஏற்படும் ஸுகதுக்கங்களை ஆலோசித்துப் பார்த்து, ஸுகமும் துக்கமும் ஸத்ருஶமாக (ஒப்பாக)இருப்பதைக்கண்டு, இவற்றை விட்டு மோக்ஷத்தை அடைய விரும்ப வேண்டும்.

8. மோக்ஷஸாதனமான பக்தியோகத்தில் நமக்கு அதிகாரமில்லை. ஶரணாகதியைத்தான் நாம் மோக்ஷத்திற்காகச் செய்யவேண்டும் என்று தீர்மானித்து, ஆசார்யன் உபதேசித்திருந்த மந்த்ரங்களைச் சொல்லி, தானாகப் பகவானிடத்தில் ஶரணமடைவதோ, ஆசார்யன் சொல்லுவதைச் சொல்லி பகவத் ஸந்நிதியில் ஶரணாகதி பண்ணுவதோ, ஆசார்யன் மூலமாக ஶரணாகதி பண்ணுவதோ இவற்றில், தன் ஞானசக்திகளுக்குத் தகுந்தது ஒன்றைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

9. கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம், ப்ரபத்தி (ஶரணாகதி) என்ற இவை நான்கும் மோக்ஷோபாயங்கள். இவற்றில் கர்மயோக ஜ்ஞாநயோகங்கள் பக்தியோகத்தின் மூலமே மோக்ஷத்தை அளிப்பன. பத்தியோகம் ஸாக்ஷாத்தாகவே மோக்ஷத்தை அளிக்கும். ப்ரபத்தி, பக்தியின் மூலமாகவும் ஸாக்ஷாத்தாகவும் மோக்ஷத்தை அளிக்கும். கீதையில் கூறப்பெற்றுள்ள இந்த விஷயங்களை நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

10. தாபத்ரயாதிகளினால் மிகவும் பீடிக்கப்பட்டவன் மோக்ஷஸாதநமான பக்தியோகத்தில் தனக்குச் சக்தி முதலியவை இல்லாமலிருப்பதைக் கண்டு வருந்தி, ஶரணாகதியில்தான், தனக்கு யோக்யதை உண்டு என்று தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

11. பகவானுக்கு அனுகூலனாக இருத்தல், தவறான காரியங்களை விட்டொழித்தல், கட்டாயம் ரக்ஷிப்பான் என்ற மஹா விஸ்வாஸத்துடன், “தேவரீரே காப்பாற்ற வேண்டும்” என்று காலத்தைக் குறித்துப் பிரார்த்தித்தல், “நான் ஏழை, வேறு கதியற்றவன்” என்ற எண்ணமுடையவனாக இருத்தல் என்ற இந்த ஐந்தும், ப்ரபத்தி செய்யும் காலத்தில் அவசியம் இருக்கவேண்டும்.

12. “ஆத்மாவை ஸமர்ப்பிக்கிறேன், பரத்தை ஸமர்ப்பிக்கிறேன், பலனையும் ஸமர்ப்பிக்கிறேன்”, என்று மூன்றையும் ஸமர்ப்பித்தல் வேண்டும்.

13.  இப்படிப் பகவானிடத்தில் ஶரணாகதி செய்த பிறகு மோக்ஷத்திற்காக வேறு எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. மறுபடி ஶரணாகதியையும் செய்யக்கூடாது. இந்த விஷயத்தை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

14.  பிறர் எவ்வளவு நிந்தித்தாலும், அவ்வளவும் ஆத்மாவைப்பற்றியதல்ல, உடலைப் பற்றியவையே என்றும், நமது கர்மாநுகுணமாகப் பகவான் ஶரீரரக்ஷணம் செய்கிறான் என்றும் நினைக்க வேண்டும். இதர பலன்கள் எவ்வளவு வந்தாலும் அவற்றில் அதிக ப்ரீதி இல்லாமலிருத்தல் வேண்டும்.

15.  நல்ல ஜ்ஞாநவான்களுடன் அடிக்கடிப் பழகி மேலும் தெளியவேண்டிய விஷயங்களைப் பரிசீலனம் பண்ணவேண்டும்.

16.  பகவத் கைங்கர்யம் இவ்வுலகிலும் நிலைத்து நிற்பதற்கு அவனடியார்களிடத்திலும் பரம விஶ்வாஸத்தோடு முடிந்த வரையில் கைங்கர்யம் பண்ணவேண்டும்.

17.  மோக்ஷத்திற்காகப் பகவானிடத்தில் ஶரணாகதி செய்த பிறகு, மேலுள்ள காலத்தில், ஶாஸ்திரம் சொன்ன கட்டளையில் வர்ணாச்ரம தர்மங்களைப் பகவத் ப்ரீதியை உத்தேசித்து ஒழுங்காகச் செய்து வரவேண்டும்.

18.  மோக்ஷத்திற்காக ஶ்ரீமந்நாராயணனிடத்தில் பரஸமர்ப்பணம் செய்தவன், பிறகு புத்திபூர்வமாக, அதாவது தெரிந்தே, பாவங்களைச் செய்தால், அந்தப் பாவங்களுக்குப் பிராயசித்தம் என்ன என்பதை அறியவேண்டும்.

19.  மஹான்கள் வாஸம் செய்யும், திவ்யதேசங்களில் ஶரணாகதன் வஸிக்க வேண்டும். அவை கிடைக்காவிட்டால், பெரியோர் வஸிக்கும் எந்த இடத்திலும் இருக்கலாம்.

20.  கடைசி காலத்தில் பகவான் நம்முடைய ஸர்வ இந்திரியங்களையும் மனதில் சேர்த்து, அந்த மனதை ப்ராணவாயுவில் சேர்த்து அந்தப் பிராணனை ஜீவனிடத்தில் சேர்த்து ஸூக்ஷ்ம ஶரீரத்தை ஹ்ருதயத்தில் கொண்டு போய், அதில் அந்த ஜீவாத்மாவைச் சேர்த்து, அவனைத் தன்னிடத்தில் சேர்த்துக்கொள்கிறான்.

21.  பிறகு ப்ரபத்தி மாஹாத்ம்யத்தினால் பகவான் காட்டிய ப்ரகாஶமான நாடியின் வழியாகத் தலைவாசலால் புறப்பட்டுச் செல்லும் ஜீவனை ஆதிவாஹிகர்கள் அழைத்துச் செல்லுகின்றனர் என்பதை அறிய வேண்டும்.

22. ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்று அங்குள்ள முக்தர்களுடனும், நித்யஸூரிகளுடனும் ஸ்ரீமந்நாராயணனுடனும் ஸமமான நிரதிசயமான ஆனந்தத்தை அடைகிறான் என்று தெரியவேண்டும்.

23. மோக்ஷம் கிடைப்பது ஓர் உபாயத்தினால்தான் என்பதில் ஸந்தேஹமில்லை. அதில் மோக்ஷத்தைக் கொடுக்கும் பகவானும் காரணம் தான். மோக்ஷத்தைக் கொடுக்கும் ஸ்ரீமந்நாராயணனை, "ஸித்தோபாயம்" என்று அறிய வேண்டும்.

24. நாம் செய்த பாவங்களினால் நம்மிடத்தில் கோபத்துடன் இருக்கும் பகவானுடைய கோபத்தை நீக்குகிறது ஶரணாகதி. இதற்கு “ஸாத்யோபாயம்” அதாவது நாம் செய்யக்கூடிய உபாயம் என்று பெயர்.

25. ப்ரபத்தியின் ப்ரபாவத்தினால் ஜாதி முதலியவை மாறிவிடா என்பதை அறியவேண்டும்.

26. ஶரணாகதன் எந்த ஜாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அவனுடைய பாவங்களைப் போக்கி, பகவானை மோக்ஷம் கொடுக்கச் செய்யும் சக்தி ப்ரபத்திக்கு உண்டு என்பதை அறிய வேண்டும்.

27. 'அ, உ, ம நம: நாராயணாய' என்ற மந்திரத்தில் கீழே சொன்ன எல்லா அர்த்தங்களும் அடங்கியிருக்கின்றன என்பதை அறிய வேண்டும்.

28. இப்படியே, “த்வயம்” என்ற மந்திரத்தில், பகவானிடத்தில் ஶரணாகதி செய்யவேண்டிய விஷயங்கள் முழுவதும் அடங்கியிருப்பதை அறியவேண்டும்.

29. “ஸர்வதர்மாந்” என்ற மந்த்ரத்தில், “தான் சொன்னபடி, ஶரணமடைந்தால் மோக்ஷம் கொடுக்கிறேன்” என்று சொன்ன கீதாசார்யனது வாக்கியத்தில் பூர்ண நம்பிக்கையுள்ளவனாக இருக்க வேண்டும்.

30. ஆசாரம் இல்லாதவனுக்கு மந்த்ரார்த்தத்தைச் சொல்லக்கூடாது. கபடமாகக் கேட்க விரும்புகிறவர்களுக்கும் சொல்லக்கூடாது. த்வேஷிகளுக்குச் சொல்லக்கூடாது. பகவத் விரோதிகளுக்கும் சொல்லக்கூடாது என்பதை அறியவேண்டும்.

31. த்ருடமான குருபக்தி வேண்டும். ஆசார்யனின் குணங்களைத் துதிக்க வேண்டும். ஆசார்யனைச் சேர்ந்தவர்களை கௌரவிக்கவேண்டும். ஆசார்யன் விஷயத்தில் எப்போதும் க்ருதக்ஞதை உள்ளவனாக இருக்க வேண்டும்.

32. கீழே சொன்ன எல்லா விஷயங்களும் “ரஹஸ்யத்ரயம்” என்ற மூன்று மந்த்ரங்களில் அடங்கியிருக்கின்றன. தினந்தோறும் ஒருவன் இவற்றை விடாமல் அநுஸந்தித்தால் உலகில் பிறந்ததின் பயனைப் பெறுவான் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விஷயங்களையெல்லாம் தெரிந்து கொண்டு, ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசம் அற, ஸகல ஜாதியாரும் நல்ல கதி அடைவதற்கும் அண்டியவர்களை நற்கதி அடையச் செய்வதற்கும் “ரஹஸ்யத்ரய ஸாரம்” என்ற அபூர்வமான க்ரந்தத்தை ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்துள்ளார். இந்த ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஶரணாகதியைப் பற்றிச் சொல்லுகிற ஸகல புராணங்களும், பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளும், வேத வேதாந்த ஸாரங்களும், ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளும் அடங்கியுள்ளன. ஶரணாகதி ஶாஸ்ரத்திற்கு விரோதம் சொல்லுகிற வாதங்களின் கண்டனங்களும் இதில் அடங்கியுள்ளன. ஸ்ரீபாஷ்யத்தின் ஸிந்தாந்தங்கள் பரிபூர்ணமாக இதில் நிறைந்திருக்கின்றன. பூர்வாசார்யர்கள் திருவுள்ளத்திற்கு உகந்த அர்த்த விசேஷங்களும் இதில் அடங்கியுள்ளன.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிய ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தை ஆசார்யர்களின் மூலம் காலக்ஷேபம் பண்ணாதவர்களுக்கு ஶரணாகதி என்றாலும், பரஸமர்ப்பணம் என்றாலும், ஆத்மநிக்ஷேபம் என்றாலும் ஒன்றுமே தெரியாது என்று நிச்சயமாகச் சொல்லலாம். “ஶரணாகதி என்று ஒன்று உண்டு” என்பதை மட்டும் தெரிந்து கொள்ளலாமே தவிர, ஶரணாகதி என்றால் என்ன?, இதில் முக்கியமான விஷயம் என்ன? அங்கங்கள் என்றால் எவை? இதற்கு முக்கியமான மந்த்ரம் எது? என்ற விஷயங்களில் எதையுமே ஸ்ரீபாஷ்யகாரரர், ஸ்ரீபாஷ்யத்தில் ஸாதிக்கவில்லை. ஆகையால் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய காலக்ஷேபம் செய்யாமல் ஸ்ரீபாஷ்யத்தை மட்டும் காலக்ஷேபம் செய்தவர்களுக்கு, பரந்யாஸ விஷயம் ஒன்றும் தெரியாதாகையால் சிஷ்யர்களுக்கு அவர்கள் பரந்யாஸம் செய்து வைக்க முடியாது. இதேபோல் கீதாபாஷ்யம் மட்டும் காலக்ஷேபம் செய்தவர்களும் பரந்யாஸ ஸ்வரூபத்தைப் பூர்ணமாகத் தெரிந்து கொள்ள முடியாது.
“கீதையில் சரம ஶ்லோகமானது பக்தியோகத்திற்கு அங்கமான ஶரணாகதியை விதிக்கிறது" என்று எம்பெருமானார் கீதாபாஷ்யத்தில் அருளிச் செய்துள்ளார். மற்ற ஶாஸ்த்ரங்களையும் ஶரணாகதி கத்யத்தையும் கொண்டு “மோக்ஷஸாதநமான ஸ்வதந்த்ர ப்ரபத்தியையும் இந்த சரமச்லோகம் விதிக்கிறது என்பது எம்பெருமானார் திருவுள்ளம்” என்று ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் தெளிவாகக் கூறியுள்ளதை யாவரும் அறியலாம்.

சுபமஸ்து.